**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண். 166/2012**

**வா.சா.2**

| | |
|---|---|
| சாட்சியின் பெயர் | : குப்புச்சாமி |
| தகப்பனார் பெயர் | : ராமசாமி கவுண்டர் |
| வயது | : 60/2026 |
| தொழில் | : |
| மதம் | : |
| ஜாதி | : |
| கிராமம் | : ராமநாதபுரம் |
| தாலுகா | : வேடசந்தூர் |
| மாவட்டம் | : திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 20.04.2026ம் தேதி என்னால் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**முன் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2வது சாட்சி. நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். விபரங்களை நான் கூற எனது வழக்கறிஞர் அதை தயார் செய்தார். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நானும், என் தந்தை ராமசாமியும் சேர்ந்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாவா வழக்கு சொத்துகள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

2. பிராது மற்றும் எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நானும், எனது தந்தையும் வழக்கறிஞரிடம் கூறினோம். பிராது மற்றும் எனது நிரூபண

வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கு அருகில் பிராதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் இல்லை என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.2 ஆவணமான கிரைய பத்திரத்தில் "இதே நம்பரில் நிறுத்திக்கொள்ளும் நிலத்திற்கு வடக்கும், மேற்கும்" என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நீலமேகம்பிள்ளையிடமிருந்து பெரியசாமிபிள்ளை கிரையம் பெறும்போது தாவா சொத்துக்கான சர்வே எண் உட்பிரிவு செய்யப்படாமல் இருந்தது என்றாலும், பெரியசாமிபிள்ளையிடமிருந்து நாங்கள் கிரையம் பெறும் போது மேற்படி சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட நிலையில் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமாலில் இதே சர்வே எண்ணில் நீலமேகம்பிள்ளை வகையறா பூமிக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. சர்வே எண்.387/2D முழுவதும் நாங்கள் வேலி அமைத்துள்ளோம் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.3ன் படி சர்வே எண்.388/2ல் நீலமேகம்பிள்ளையிடமிருந்து பெரியசாமிபிள்ளை மகன் முருகேசன் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கிரையம் பெற்றுள்ளார் என்றால் 2 ஏக்கர் 70 செண்ட் ஆகும். மேற்படி சர்வே எண்.388/2க்கு கட்டுப்பட்ட நிலத்தை கிரையம் பெறும்போது சர்வே எண்.388/2B என உட்பிரிவு செய்யப்பட்ட நிலையில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

8. தாவா சொத்திற்கு ரோடு முடிந்த இடத்தில் இருந்து வேலி அமைத்துள்ளோம் என்றால் சரிதான். கோவிலூர் ரோடு சர்வே எண்.389 என்றால் சரிதான்.

9. பி.வா.சா.ஆ.1ன் படி சர்வே எண்.388/2B க்கு வடபுறம் சர்வே எண்.388/2A உள்ளது என்றால் சரிதான்.

10. தாவா பிராதில் எங்கேயும் நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்பதால் தாவா சொத்துக்களை அடையாளம் காண முடியாது என்றால் சரியல்ல.

11. எனது மகன் சிபிக்குமார். தாவா சொத்தை எனது தகப்பனார் ராமசாமி

2016ல் தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். அதனால் தாவா சொத்துக்களை எனது மகன் சிபிக்குமார் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

12. தாவா சொத்துக்களை பொறுத்து தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எனது மகன் சிபிக்குமாருக்கு அதற்குரிய உரிமை மூலத்தை முழுமையாக பாத்தியப்படுத்திவிட்டதை மறைக்கும் எண்ணத்துடன் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளோம்.

13. தாவா சொத்து எனது தந்தையின் பெயரில் இல்லை என்பதாலும், அவருக்கு உரிமையும், உரிமை மூலமும் இல்லை என்பதாலும் தாவா வழக்கை தாக்கல் செய்ய அவருக்கு தகுதி இல்லை என்பதால் சரியல்ல.

14. தாவா வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**